Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 086 | வியாழக்கிழமை Thursday | 25.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# எரிசக்தி துறையில் 401 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள்

## முதலமைச்சர் விஜய் வழங்கினார்





சென்னை: எரிசக்தித் துறைசார்பில்தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை முதல்வர் விஜய் வழங்கினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்றநிகழ்ச்சியில், எரிசக்தித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்கள் என மொத்தம் 401 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை முதல்வர் விஜய் (ஜூன் 24) வழங்கினார்.

முன்னதாக முதல்வர் விஜய் தலைமையில் நடைபெற்ற எரிசக்தித் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டத்தின்போது, மின்சார வாரியத்தில் நிலவும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு நிலைகளில் உள்ள 70,000-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளதும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, முதல்வர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், எரிசக்தித் துறையின் மனிதவளத்தை வலுப்படுத்தும் முயற்சியை முன்னெடுத்து, தடையற்ற மற்றும் சீரான மின்சாரம் வழங்கிடும் வகையில், ஓராண்டுக்குள் குறைந்தபட்சம் 15,000 பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.\மேலும்,தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 401 நபர்களுக்கும் வாரிய விதிமுறைகளின்படி, உடனடியாக பணிநியமன நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு (TNPDCL) தெரிவு செய்யப்பட்ட 383 உதவிப் பொறியாளர் (மின்னியல்) மற்றும் 18 உதவி கணக்கு அலுவலர்களுக்கு முதல்வர் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார். தமிழ்நாடு அரசின் வெளிப்படையான ஆட்சிமுறையின் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இந்தப் பணி நியமனங்கள், எரிசக்தித் துறையின் செயல்திறனை மேலும் மேம்படுத்துவதோடு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தரமான மற்றும் தடையற்ற மின் சேவைகளை வழங்குவதற்கான மனிதவளத்தை வலுப்படுத்தும் முக்கிய நடவடிக்கையாகவும் இது அமையும்.

இந்நிகழ்ச்சியில், எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார்,கூடுதல்தலைமைச் செயலாளர் / மின்சார வாரியத் தலைவர் டாக்டர்ஜெ.ராதாதிருஷ்ணன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் அணில் மேஷ்ராம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெல்லியில் அமெரிக்க பிரதிநிதிகளுடன் 2 நாள் ஆலோசனை; இறுதிக் கட்டத்தில் வர்த்தக ஒப்பந்தம்



புதுடெல்லி: இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை நெருங்கி உள்ளது என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். அ மெ ம ரி க் க பிரதிநிதிகளுடன் டெல்லியில் நடத்திய 2 நாள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தத் தகவலை அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 2-வது முறையாக பதவியேற்ற பின், உலக நாடுகளுக்குப் பரஸ்பர வரிவிதிப்புமுறையைகொண்டு வந்தார். அமெரிக்க பொ ருட்களுக்கு இந் தியா போன்ற நாடுகள் 100 சதவீதத்துக்கும் அதிகமாக வரி விதிப்பதாக அதிப ர் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

இந்தி யாவில் இருந்து அமெ ரிக் காவில் இறக்கும தி செ ய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வ ரி விதிக்கப்பட்டு வ ந் தது. ரஷ்யாவிடம் இ ருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்குஅமெரிக்காதடை வி தி த்திருந்தது. இதை ஐ ரோப்பிய நாடுகளும் பின் பற்றி ர ஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதைத் தவிர்த்து வ ளைகுடா நாடுகளிடம் கச்சா எண்ணெய் வாங்கத் தொடங்கி ன. ரஷ் யாவிடம் இருந்துசீனாமற்றும்இந் தி யா போன்ற நாடுகள் கச்சாஎண்ணெய் வாங்குவதா ல் தான், உக்ரைன் போரை தொடர்ந்து நடத்துவதற்கான நிதி ரஷ்யாவுக்கு கி டை ப் ப தாக அமெரிக்கஅதிபர் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

இத ற்கு அ ப ராத மாக இந் தியாவுக்கு கூடு த லாக 25 ச தவீத வரி வி திப் பதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். இதனா ல் இந் தி யாவுக்கு அ மெ ரி க்கா வி தித்த இறக்குமதி வரி 50 சதவீதமா க உ யர்ந்தது. இது அமெரிக்காவுக்கான இந் தி ய ஏ ற்று மதியைக் க டு மையா க பா தித்தது. இத ன் கார ணமாக இந் தியா - அ மெரிக்கா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தைதடைபட்டது.

இதையடுத்து ரஷ்யா விடம்இருந்துகச்சாஎண்ணெய் இறக்குமதியை இந்தியா குறைக்கத் தொடங்கியது.அதன்பின் இந் தியா - அமெ ரிக்கா வர்த்த கம் தொடர்பான பேச்சுவா ர்த்தைகள் மீ ண்டும் தொடங்கின. அடுத்த சில ஆண்டுகளி ல் அமெரிக்காவில் இருந்து 50 0 பில்லியன் டாலர் அ ள வுக்கு இறக்கும தி செய்யவும், முதலீ டு செய்யவும் இந்தியா உறுதி யளித்துள்ளது. இத ன் காரண மாக, இந் திய ஏ ற் றுமதிகள் மீது விதிக்கப்பட்ட வரி 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டது.

பி ரான்ஸில் நடைபெ ற்ற ஜி7 கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - பி ரதமர் மோடி ஆகியோ ர் நீண்ட இடைவெளி க்குப் பின் நேரில் சந் தித்துபேசினர்.அப்போது இ ந் தியா - அமெரிக்கா இ டையே மிகச் சி றந்த வர்த்தக ஒ ப்பந்தம் கையெழுத்தாகும் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித் தார்.

இந் தப் பேச்சுவார்த் தை களின் மு ன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக, அமெரிக்க வர்த் தகப் பி ரதிநிதி தூதர் ஜேமிச ன் கி ரீர் மற்றும் அவரது குழு வினர் டெல்லி வ ந்துள்ளனர். அவர்க ளுட ன் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூ ஷ் கோயல் தலைமையிலான மத்திய அரசு கு ழுவினர் நேற்றுமுன் தி னம் பேச்சுவார்த் தையைத் தொடங்கினர். இருதரப்பு பேச்சுவார்த்தை டெ ல்லியில் நேற்றுடன் முடிந்தது.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் அமைச்சர் பியூஷ் கோயல் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

இந்தியா - அமெரிக்கா இ டையிலான வர்த்தகப் பே ச்சுவா ர்த்தைகளின் நிலைகுறித்து அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி தூதர் ஜே மிசன் கிரீர் மற்றும் அவ ரது குழு வினருடன் வி வா தி த்தோம். பொரு ளாதார உறவுகளை மே லும் வலுப் ப டுத்துவதற்கான வழிகளை நாங்கள் ஆராய்ந்தோம். இரு நா டுகள் இடையேயான பொருளாதாரக் கூட்டாண்மையை மேம் படு த் து வதற்கான வழி க ளை யு ம் நாங் கள் ஆ ரா ய்ந் தோம். அமெரிக்க தூதர் கிரீரின் தலைமைத்துவத்தையும்,நமது பே ச் சு வார்த் தைகளை ஆ க்கப்பூ ர்வமான மற்றும் தொலைநோக்கு சிந் த னை யுடன் மு ன்னோக்கி கொண்டு செல்வதில் இரு குழுக் க ளும் தொடர்ந்து மேற் கொண்டு வரும் முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன். இவ்வாறு பியூஷ்கோயல்கூறினார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் ஜூன் 28ம் தேதி முதல் கனமழை பெய்யும்; வானிலை ஆய்வு மையம்



சென்னை: தமிழகத்தில் ஜூன் 28ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வே க ம ா று பா டு நிலவுகிறது. இதன் காரணமாக,நாளை (ஜூன் 25) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், ஜூன் 26, 27 தேதிகளில் தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வடதமிழகத்தின் உள் பகுதிகளில் ஓரிரு இடங்களும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும். ஜூன் 28-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், ஜூன் 29, 30 தேதிகளில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் 27-ம் தேதி கோவை மற்றும் தேனி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி மாவட்டத்திலும், 28-ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, நீலகிரி, கோவை,திருப்பூர்,திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி,மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் சூறாவளி க்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வே க த் தி லு ம் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் 4 செமீ, நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரத்தில் 3 செமீ,பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை, சென்னை ஆட்சியர் அலுவலகம், பெரம்பலூர், பெரம்பூர் (சென்னை) ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்

25.06.2026

முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# தூத்துக்குடியில் மத்திய மாவட்டம் 34வது வட்ட கழகம் சார்பில் 150 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்



தமிழக முதல்வர் ச. ஜோசப் விஜயின் 52ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநிலம் முழுவதும் த.வெ.க.வினரால் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதையடுத்து 3ம்மையில் பகுதியில் தூத்துக்குடி மத்திய மாவட்டம் 34வது வட்ட கழகம் சார்பில் 50மாணவ பள்ளி குழந்தைகளுக்கு நோட்புக் பென்சில் போன்ற கல்வி உபகரங்களை மற்றும் பெண்கள் 100பேருக்கு சேலைகள் என 150 பேருக்கு நலத்திட்ட உதவிகளை தூத்துக்குடி மத்திய மாவட்ட கழக செயலாளர் எஸ்.டி.ஆர். சாமுவேல்ராஜ் மற்றும் 34வது வட்ட கழக செயலாளர் எம். கே.பாலமுருகன் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னதாக 10கிலோ கேக் வெட்டி பொதுமக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

ஏற்பாடுகள் அனைத்தும் 34வது வட்டச் செயலாளர் எம்.கே.பாலமுருகன் செய்திருந்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக பொருளார் சிவகுமார், 34வது வட்ட கழக நிர்வாகிகள் இணை செயலாளர் ரமேஷ், பொருளார் கருப்பசாமி, துணை செயலாளர்கள் விஜயராஜன், ராஜ்குமார் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# சாயமலை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது

தென்காசி மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றியம் சார்பாக தமிழ்நாடு ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் பொதுச் செயலாளர் ஆனந்த் அவரது வாழ்த்துக்களுடன் தமிழக முதலமைச்ர் ஜோசப் விஜய் அவரது 52 வது பிறந்தநாளைமுன்னிட்டு சாயமலை ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமையில் 130 மாணவ மாணவியர்களுக்கு நோட்டு , பேனா, தேர்வு அட்டை வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் மாவட்ட இணைச் செயலாளர் அகல்யா சூர்யா மற்றும் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துக்காளை மற்றும் மேற்கு ஒன்றிய செயலாளர் கௌதம் மாவட்ட மாணவரின் அமைப்பாளர் ஹமீது மாவட்ட செயற்குழு உறுப்பினர் தங்க மாரியப்பன் தவுடு மற்றும் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய இணைச் செயலாளர் சண்முகராஜ் மற்றும் ராஜசேகர், லட்சுமணன் நாராயணன், தமிழ்வாணன் ,ராஜ் ,பொன்ராஜ், முருகன், காளி பாண்டி. ராஜதுரை, காசி பாண்டியன், மல்லிகாசெல்லப்பாண்டியன்,கடற்கரை.கிழக்கு ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு நோட்டு பேனா இதற்கான ஏற்பாடுகளை சிதம்பரபுரம் கிளை செயலாளர் ராஜசேகர் செய்திருந்தார்




மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி "ரத்தசோகை இல்லா கடலூர் மாவட்டம்" உருவாக்கும் நோக்கில் வேப்பூரில் உள்ள சாய் அப்பல்லோ நர்சிங் கல்லூரி சார்பில் ரத்தசோகை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நல்லூர் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் டாக்டர் பிரவீன், செவிலியர்கள், மாவட்ட சுகாதாரக் கல்வியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் கிஷோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு ரத்தசோகை ஏற்படும் காரணங்கள், தடுப்பு முறைகள் மற்றும் சத்தான உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், மாணவர்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக பங்கேற்ற நிலையில், கல்லூரி மேலாளர் பிரவீன் குமார் நன்றியுரை வழங்கி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

# தென்காசி மத்திய மாவட்டம், ஆலங்குளம் வடகிழக்கு ஒன்றியத்தில் முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாள் விழா



தென்காசி மத்திய மாவட்டம், ஆலங்குளம் வடகிழக்கு ஒன்றியம் தமிழக வெற்றிக் கழகம், சார்பில், மாவட்ட செயலாளர் ஜெ ஏ எஸ் ராஜ பிரகாஷ் ஆலோசனையின் கீழ் ஆலங்குளம் வடகிழக்கு ஒன்றிய செயலாளர்

எம்.வேல்ராஜ் தலைமையிலும், தட்டப்பாறை கிளை கழக செயலாளர் எம். ஐயாதுரை பாண்டியன் முன்னிலையில் முதல்வர் விஜய்- அவர்களின் 52-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

இவ்விழாவை முன்னிட்டு ஊத்துமலை கோவிலில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டதுடன், தேவர் திருமகனார் திரு உருவச்சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊத்துமலை, ருக்குமணியம்மாள் புரம்,கம்மாவூர், (ஏ) கே நவநீத கிருஷ்ணபுரம், வடக்கு காவலாகுறிச்சி மற்றும் தட்டப்பாறை ஆகிய கிராமங்களில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்விக்கு தேவையான நோட்டுப் புத்தகங்கள், பென்சில்கள், எரேசர்கள், ஷார்பனர்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மொத்தம் 225 மாணவ, மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்.

# தகுதியும், அனுபவமும் உள்ள வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமிக்க வேண்டும்

## தமிழக முதல்வருக்கு மனு அளித்த தமிழக முற்போக்கு மக்கள் கட்சியினர்



கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல தலைமை அலுவலகம் அமைந்துள்ளது இதன் மாநிலத் துணைத் தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவர் கடந்த, 20 வருடங்களுக்கு மேலாக இலவச சட்ட ஆலோசனை மற்றும் சமூக சேவை செய்து வருகின்றார். இக்கட்சியின் மாநில தலைவராக வழக்கறிஞர் சக்திவேல் இருந்து வருகிறார். இந்த நிலையில் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அளித்துள்ளார். அந்த மனுவில் தமிழ்நாட்டில் த.வெ.க.ஆட்சி நடந்து வருகிறது. கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் கடந்த 08.06.2026-ம் தேதி விளம்பர நோட்டிபிகேஷன் ஒன்று அனுப்பி உள்ளார். அதில் கோவை மாவட்டம் முழுவதும் உள்ள கீழமை நீதிமன்றங்களில் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர், சிறப்பு அரசு வழக்கறிஞர்கள். கவர்மெண்ட், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் மற்றும் சப்-கோர்ட்டுகளில் மற்றும் விரைவு நீதிமன்றங்களில் உள்ள காலியிட பணிக்கு நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சியரிடம் உரிய விண்ணப்பங்களை தகுதிவாய்ந்த வழக்கறிஞர்கள் வழங்கலாம் என்று தெரிவித்துள்ளார் வருகிற 25.06.2026-ம் தேதி விண்ணப்பம் செய்ய கடைசி தேதி எனவும் தெரிவித்துள்ளார். இந்தநிலையில்,நியாயமான முறையில் அனுபவமிக்க தகுதியான வழக்கறிஞர்களை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பயிற்சி இல்லாத மற்றும் நீதிமன்றத்திற்கு வராத கட்சி வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமனம் செய்யக் கூடாது எனவேண்டிக்கொள்கிறோம். லஞ்ச லாவண்யத்திற்கு இடமளிக்காத வகையில் அரசு வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். கடந்த 50 ஆண்டு காலமாக எந்த கட்சி ஆட்சிக்குவருகிறதோ அந்த ஆளும் கட்சியின் சார்பாக பணத்தை வாங்கிக் கொண்டு கட்சிக்கு உழைத்தவர்களுக்கு சிபாரிசு உள்ளவர்களுக்கு மட்டும் தான் அரசு வழக்கறிஞர் பதவி வழங்கி வந்தார்கள் என அனைவரும் நன்கு அறிவார்கள். பணத்தை வாங்கிக் கொண்டு பணி நியமனம் செய்ய வேண்டாம் என கேட்கிறோம் என்று மனு அளித்துள்ளார்.

எனவே தமிழக முதல்வர் அவர்கள் இதனை கருத்தில் கொண்டு நியாயமான முறையில் தகுதி உள்ள அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமிக்க வேண்டும் படி தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம் என்று மனு அளித்துள்ளார்.

இந்திய பாரம்பரியத்தைப் போற்றும் வகையில்

# கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் டேல்ஸ் ஆஃப் இந்தியா ஆடைகள் தொகுப்பு அறிமுக விழா நிகழ்ச்சி நடைபெற்றது



பாரம்பரிய கைவினை மற்றும் நிலைத்தன்மை மிக்க ஆடை வடிவமைப்புக்காக அறியப்படும் சொகுசு ஆடை நிறுவனமான கையாரா இந்தியாவின் கலை,கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் புதிய உயர்தர ஆடைத்தொகுப்பான 'டேல்ஸ் ஆஃப் இந்தியா'வை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவின் 28 மாநிலங்களின் பாரம்பரியக் கலை வடிவங்கள், எம்பிராய்டரி நுட்பங்கள் மற்றும் கலாசாரக் கதைகளில் இருந்து ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு, பாரம்பரியத்தையும் நவீன ஆடை வடிவமைப்பையும் ஒருங்கிணைக்கும் முயற்சியாக அமைந்துள்ளது. தலைமுறைகளாகக் கடத்தப்பட்டு வரும் கைவினைத் திறன்களை பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொரு ஆடையும் தனித்துவமான வடிவமைப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து கையாரா நிறுவனத்தின் நிறுவனர் ஹர்ஷாவர்தினி செய்தியாளர்களிடம் கூறியதாவது, இந்தியாவின் பாரம்பரியத்தையும், கைவினைக் கலைஞர்களின் பங்களிப்பையும் போற்றும் வகையில் 'டேல்ஸ் ஆஃப் இந்தியா' உருவாக்கப்பட்டுள்ளது. பாரம்பரியத்துக்கும் நவீன சொகுசு ஆடை வடிவமைப்புக்கும் இடையே பாலமாக இந்தத் தொகுப்பு அமையும். இந்தியாவின் வளமான கலாசார மரபை உலக அரங்கில் எடுத்துச் செல்லும் நோக்கத்துடன், அதன் உண்மைத்தன்மையையும் பாதுகாக்கும் முயற்சியாக இது அமைந்துள்ளது" என்றார். இந்த ஆடைத் தொகுப்பின் பிரம்மாண்ட அறிமுக நிகழ்ச்சி, ஊடகப் பிரபலமும் கலாசார தூதுவருமான அபர்ணா சுங்கு தலைமையில் நடைபெற்றது. இந்திய பாரம்பரியம் மற்றும் கதை சொல்லல் மீதான அவரது ஆர்வம், இந்தத் தொகுப்பின் நோக்கத்துடன் ஒத்துப்போவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. நிகழ்ச்சியில் ஆடை வடிவமைப்புத் துறையினர், ஊடகப் பிரதிநிதிகள், கலாசார ஆர்வலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கையாரா நிறுவனத்தில் அன்றாட பயன்பாட்டிற்கான சாதாரண ஆடைகள், மணமகள் ஆடைகள், விடுமுறை மற்றும் சுற்றுலா பயணங்களுக்கு ஏற்ற ரிசார்ட் ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பெண்கள் ஆடைகள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.மேலும்,வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட விருப்பங்கள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பிரத்யேக தனிப்பயன் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



கோவை மேட்டுப்பாளையம் சாலையில், C 5 கவுண்டம் பாளையம் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு கடந்த வாரம் புதிய காவல் ஆய்வாளராக கந்தசாமி பொறுப்பேற்றார். அவரை மரியாதை நிமித்தமாக தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக அதன் மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் சந்தித்து வாழ்த்து கூறினார். இதில் சிவாஜி காலனி குடியிருப்போர் நலசங்க தலைவர் டாக்டர் லயன் நடராஜன், வழக்கறிஞர் குமாஸ்தாக்கள், லட்சுமி, திவ்யா, ரம்யா, பெரியகுமாஸ்தா செல்வராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நமச்சிவாயம் இந்தியாவின் பாரம்பரியமான நாட்டு பசுக்களை காப்பது மட்டுமின்றி அதைபாதுகாப்புடன்வளர்ப்பது நாட்டுப்பசுவை காப்போம் என்று உறுதிமொழி கொண்டு இந்த ஸ்ரீ யோக சித்தர் கோசாலை அறக்கட்டளை துவக்கப்படுகிறது அனைத்து பொதுமக்களும் கோதானமும் மாற்று தீவனங்களும் கொடுத்து இந்திய பாரம்பரியமான நாட்டு பசுவை காப்பாற்றுவோம் என்று உறுதிமொழி கொண்டு இந்த துவக்கு விழாவுக்கு அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறார் ஸ்ரீ யோக சித்தர் இடம் சங்ககிரி ஆர் எஸ் கோழிக்கால் நத்தம் ரோடு கஸ்தூரி பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ யோக சித்தர் கோசாலை அறக்கட்டளை

## மத்திய அரசு நீட் தேர்வில் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டில் அச்சத்தை உருவாக்கியுள்ளது மாணவர்களை ஒன்றிணைத்து நாடு முழுவதும் போராட்டம் நடத்த உள்ளோம்

### தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி பேட்டி



தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் பெருமாள் சாமி கதிர்வேல் செய்தியாளர்களை சந்தித்தார்.. அப்போது அவர் கூறுகையில், பாஜக கல்வித் துறையில் மிகப்பெரிய மோசடியை செய்துள்ளது. மத்திய அரசு நீட் தேர்வில் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டில் அச்சத்தை உருவாக்கியுள்ளது. நீட் தேர்வு காரணமாக ஒரு பெண் தற்கொலை செய்துள்ளார். மாணவர்களின் உயிர்மற்றும்எதிர்காலத்துடன் விளையாடும் நிலை உருவாகியுள்ளது"

நீட் தேர்வுக்காக மத்திய அரசு ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் கோடி ஒதுக்குவதாக கூறுகிறது. ஆனால் தேர்வு மையங்களுக்கே ரூ.1 லட்சத்து 32 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது. 22 லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதும் நிலையில், வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. மாணவர்கள் அச்சத்தில் உள்ளனர். இதனை கண்டித்து மாணவர்களை ஒன்றிணைத்துநாடுமுழுவதும் போராட்டம் நடத்த உள்ளோம். இதற்குப் பொறுப்பேற்று மத்திய அரசுபதவிவிலகவேண்டும்.

நீட் தேர்வு தொடர்பான மனஅழுத்தம் மற்றும் பிரச்சினைகளால் 12பேர் உயிரிழந்துள்ளனர் ஆனால் இதுகுறித்து மத்திய அமைச்சர்கள் உரிய எந்த விளக்கமும் அளிக்கவில்லை

ஆக மாணவர்கள் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது இதை கண்டிக்கிறோம் கூடிய விரைவில் மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்தார்.

---

சுரண்டை சிவகுருநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகா ஸ்மேத

## ஸ்ரீ அண்ணா மலையார் திருக்கோவிலில் இரண்டாம் கால பூஜை மற்றும் மூன்றாம் கால பூஜை

தென்காசி மாவட்டம் சுரண்டை சிவகுருநாத புரம் ஸ்ரீ அண்ணாமலை நகரில் அமைந்து உள்ள அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகா ஸ்மேத ஸ்ரீ அண்ணா மலையார் திருக்கோவி லில் நூதன ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெறுவதை யெட்டி இரண்டாம் கால பூஜை, மற்றும் மூன்றாம் கால பூஜை சுரண்டை சிவன் கோவில் ஸ்தானிகர் சிவாச்சாரியார் சிவாகம சிரோன்மணி சிவாகம ரத்னா சிவ எம் மணிகண்டன் தலைமையில் 36 சிவசாரியார்கள் மற்றும் ஸ்ரீ அன்னாமலையார் ஈஸ்வரர் திருக் கோயில் அர்ச்சகர் சங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு மங்கள இசை, முழங்க, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, புண்யாஹ வாசனம், பஞ்ச காவ்யம், மண்டப பூஜை, அஷ்டோத்தர அர்ச்சனை, சூரிய பூஜை, சந்திர பூஜை, வேதிகா அர்ச்சனை , அக்கினி காரியம், தீராவ்யாஹுதி பூர்ணாஹூதி மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது

பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் யந்திரங்தாபனம் பிரசாதங்கள் வழங்கப்பட்டது இதற்கான ஏற்பாடுகளை சிவகுரு நாதபுரம்ஸ்ரீ அண்ணா மலையார் கோவில் நிர்வாக கமிட்டி தலைவர் வைரமுத்து, செயலாளர் ஏஎம்சமுத்திரம், பொருளாளர் சமுத்திரம், துணைத் தலைவர் இலட்சுமணன், துணைச் செயலாளர் மாரியப்பன், ஆகியோர் முன்னிலையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர்




---

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள

## கே.ஜி.கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கல்லூரி துவக்க விழா நிகழ்ச்சி

கோவை சரவணம்பட்டி பகுதியில், கே ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கல்லூரி துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்வித்யாஅனைவரையும் வரவேற்று பேசினார். கல்லூரியின் செயலர் முனைவர் வனிதா தொடக்க உரை நிகழ்த்தினார். மேலும் கேஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் முனைவர்அசோக்பக்தவச்சலம் தலைமை உரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் காயத்ரி பாலகோகுலவர்தன் மற்றும் அபிநயாஆகியோர் முதலாம் ஆண்டு மாணவர்களிடம் தங்களின் கல்லூரி அனுபவங்களையும் தங்களுக்கு கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி அவர்களை வாழ்வின் உயர்வுக்கு கொண்டு செல்ல எவ்வாறு உதவுகிறது என்பதையும் எடுத்துக் கூறினார்கள் இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டமாற்றம் அறக்கட்டளையின் நிர்வாகஅறங்காவலர்சுஜித்



குமார் பேசும்போது சுய முயற்சி தன்னம்பிக்கை தனித்திறன் மேம்படுத்துதல் மற்றும் சிறந்த வழிகாட்டுதலை பெறுதல் ஆகியவற்றின் மூலம் எவ்வாறு இலக்குகளை அடைய முடியும் என்று மாணவ மாணவிகளுக்கும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் கே ஜி கல்வி குழுமத்தின் வருங்கால முன்னெடுப்புக்குக்கான இயக்குனர் அத்விக் கோவிந்த் அசோக் சிறப்புரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் 25க்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளில் பயிலவிருக்கும் 1500 க்கும் மேற்பட்ட புதிய மாணவ மாணவிகள் தங்களது பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தூத்துக்குடி மேல சண்முகபுரம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் கொடைவிழா: கால்நாட்டுடன் கோலாகல துவக்கம்

தூத்துக்குடி மேலச்சண்முகபுரம், தங்கையா நாடார் தெரு (வண்ணார் 3ம்தெருதொடர்ச்சி)பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் கொடைவிழா இன்று காலை 10.35 மணிக்கு மேல் 11.45 மணிக்குள் ஆலயத்தில் பாரம்பரியமிக்க கால்நாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.


கோவில் விழாவில் 9 நாட்கள் நடைபெறும் திருவிழா:

இன்று துவங்கியுள்ள இக்கொடைவிழாவானது வரும் 01.07.2026 வரை தொடர்ந்து 9 நாட்களுக்கு மிக விமரிசையாக நடைபெற உள்ளது. விழாவின் முக்கிய நிகழ்வான கோவில் கொடைவிழா வரும் ஜூன் 30-ம் தேதி (ஆனி மாதம் 17-ம் தேதி) செவ்வாய்க்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

கலைநிகழ்ச்சிகளும் ஆன்மீக நிகழ்வுகளும்:

விழா நடைபெறும் 9 நாட்களும் தினமும் மதியம் மற்றும் இரவில் அம்மனுக்குச் சிறப்புப் பூஜைகளும், தீபாராதனைகளும் நடைபெறுகின்றன. இவற்றுடன் பக்தர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு ஆன்மீக மற்றும் கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:

தொடர்ந்து ஆன்மீக சொற்பொழிவு, வில்



லிசை மற்றும் கும்பிபாட்டு, இசைக்கச்சேரி, பட்டிமன்றம், அம்மன் வீதியுலா வரும் சப்பரபவனி மேலும், விழாவிற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் சிறப்பு பூஜையில் கலந்து கொள்ள உள்ளனர்.

விழா ஏற்பாடுகள்

இவ்விழாவிற்கான முழு ஏற்பாடுகளையும் கோவில் தலைவர் மற்றும் தர்மகர்த்தா கோட்டுராஜா தலைமைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். அவருடன் இணைந்து கோவில் நிர்வாகிகள், கொடைவிழா ஆலோசகர்கள், கொடைவிழா குழுவினர் மற்றும்உள்ளூர் இளைஞர் அணி & மகளிர் அணியினர் மிகச்சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

---

## தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஜூன் 28ம் தேதியன்று போலியோ சொட்டு மருந்து முகாம்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

2026 ஆம் ஆண்டு தேசிய போலியோ தினம் 28.06.2026 அன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் வரும் ஜூன் 28-ம் தேதியன்றுபோலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாம் குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது.



போலியோ என்னும் இளம்பிள்ளை வாத நோயினை தடுப்பதற்காக நாடு தழுவிய அளவில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் 1995-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு இந்தியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் நமது அண்டை நாடுகளிலிருந்து போலியோ தொற்று நம் நாட்டிற்கு வராமல் தடுப்பதற்கு 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பொருட்டு இந்த ஆண்டு ஜூன் 28-ம் தேதி, இம்முகாம் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

பணிகளுக்காக அரசு இப்போலியோ சொட்டு மருந்து முகாம் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்கள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், சத்திரங்கள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் ஆகிய இடங்களில் முகாம்கள் நடைபெற உள்ளது. அருகாமையிலுள்ள மாவட்டங்களின் எல்லை பகுதிகள், குடிசைப்பகுதிகள், பணி நிமித்தம் தொடர்பாக இடம் பெயர் மக்கள் வாழும் பகுதிகள் ஆகிய இடங்களில் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பேருந்து நிலையங்கள், புகைவண்டிநிலையங்கள் மற்றும் மக்கள் கூடுமிடங்களில் உள்ள குழந்தைகளுக்கு நடமாடும் குழுக்கள் மூலம்சொட்டுமருந்து வழங்கப்படும். இவ்வாறு தேர்வு செய்யப்பட்டுள்ள 1385 மையங்களில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 1.5 இலட்சம் குழந்தைகளுக்கு இச்சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. இப்பணிகளில் சுகாதாரத்துறையுடன் இணைந்து பள்ளிக் கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் நல வளர்ச்சி திட்டம், சமூக நலத்துறை, வருவாய் துறை, இந்திய குழந்தைகள் நல மருத்துவ சங்கம், இந்திய மருத்துவ சங்கம் மற்றும் தன்னார்வதொண்டு நிறுவனங்கள் பங்கேற்று செயல்பட உள்ளன.

எனவே பெற்றோர்கள் தங்களின் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் அருகிலுள்ள முகாம்களுக்கு அழைத்து சென்று போலியோ சொட்டு மருந்து கொடுத்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் ஜூன் 29-ம் தேதி முதல் ஜூலை 4-ம் தேதி வரை வீடு வீடாக சென்று பார்வையிடப்பட்டு விடுபட்ட 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. எனவே அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு போலியோ இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழக வெற்றிக் கழக தலைவருமான ச.ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கே.கே.ஆனந்தமோகன் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

# 500 மின்சார பேருந்து டெண்டர் ரத்து: தமிழக அரசு உத்தரவு



தமிழகத்துக்கு 500 மின் சார பேருந்துகள் கொ ள் முதல் செய் வதற்கான டெண்டரை அர சு ரத்து செய்துள் ளது . தமிழகத்தில் 2025 முதல் மின்சார பேருந்துகள் இயக்கப் பட்டு வருகின்றன. இந்த மின்சார பேருந்துகளை ஒப் ப ந்த நிறு வனமே கொள் மு தல் செய் து, இயக்கி பராமரிக்கும். அதற்கான குறிப்பிட்ட தொகையை ஒப் பந்த நிறுவனத்துக்கு அரசு வழங்கும்.

அதன்பின், சென் னை, மது ரை, கோவையில் பயன் படுத்த 500 மின்சார பேருந்துகள் கொள் முதல் செய்ய டெண் டர் கோரப் பட்ட து. இந்தப் பேருந்துகள் ஜெர் மனி வங்கி நிதியுதவிடன் வாங்க திட்டமிடப்பட்டது.

இதுகுறித்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: தற்போதைய சூழலில் பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகங்கள் கொள்முதல் செய்து இயக்குவது நிதி இழப்பை ஏற்படுத்தும். இதுகுறித்து ஜெர்மனிவங்கியிடம்தெரிவிக்கப்பட்டு,தற்போதுள்ள நடைமுறை யை பின்பற்ற கோரிக்கை கடிதம் அனுப்பட்டது. இந்த கோரிக்கையை ஏற்று, கடந்த ஜூன் 18-ம் தேதி டெண்டர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஜெ ர்மன் வங்கியும் ஒப்புதல் அளித்தது. இதன் காரணமாகவே டெண்டர் ரத்து செய்யப்பட்டது.

# திமுக தலைவர் மற்றும் எதிர்கட்சி தலைவரை சந்தித்த ஊராட்சி ஒன்றிய தலைவி திவ்யா மணிகண்டன்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவி-யாக இருந்து வருபவர் திவ்யா மணிகண்டன் ஆவார் இவர் சென்னை அண்ணா அறிவாலயத்-தில்திராவிட முன்னேற்ற கழக தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களை-யும் தற்போது சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக இருந்து வரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களை-யும் மரியாதை நிமித்தமாக நேரில் சந்-தித்து புத்தகங்கள் வழங்கி வாழ்த்து பெற்-றார் இது குறித்து அவர் கூறியதாவது கழகம் ஆட்சியில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி எப்போதும் பொது-மக்களின் நலங்களுக்-காக குரல்கொடுக்கும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் நடந்து முடிந்த சட்ட-மன்ற தேர்தலில் எதிர்-பாராத விதமாக சிறு குழந்தைகளின் வேண்-டுகோளை ஏற்று பெற்-றோர்கள் ஒருவர் ஆட்சி அமைக்க உதவி புரிந்துள்ளனர் நன்கு சிந்தித்த பெரியோர் யாவரும் தமிழகத்தில் மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி தொடரும் என்ற நிலையில் தான் செயல்-பட்டு வந்தனர் ஏனென்-றால் ஒவ்வொரு குடும்-பத்திலும் ஏதாவது ஒரு வகையில் அரசின் நலத்-திட்டங்கள் அவர்களை சென்று அடைந்துள்ளது குறிப்பாக நான் முதல்-வன் புதுமைப்பெண் இல்லம் தேடி கல்வி மக்-களை தேடி மருத்துவம் உங்களுடன் ஸ்டாலின்-காலை உணவு திட்டம் தூய்மை பணியாளர் காலைஉணவுசிற்றுண்டி திட்டம் போன்றகுறிப்-பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கலை-ஞர் இலவசவிடியல் பய-ணம் போன்ற அனைத்து அரசு நலத்திட்டங்களை அனுபவித்த மக்கள் ஒரு சிலர் தங்களது பிஞ்சு குழந்தைகளின் குரல்க-ளுக்காக வாக்குகளை மாற்றி அமைத்ததாக தெரிவித்துள்ளனர் ஏன் வாக்களித்தோம் என்று இன்னும் விடை தெரி-யாமல் இருட்டுக்குள் தத்தளித்து வருகின்றனர் எப்படி ஜெயித்தோம் என்று அவர்களாலே யூகிக்க முடியவில்லை இந்த நிலையில் தான் தற்போது தினமும் கொலை கொள்ளை பாலியல் துன்புறுத்தல் மின்வெட்டு ஆகிய மக்-கள் விரோத சக்தி தான் தற்போது மக்களை வாட்டி வதைக்கிறது இந்த நிலை என்று மாறும் பொதுமக்கள் விடியலை நோக்கி காத்-திருக்கின்றனர் சட்ட-மன்றத்தில்பேச வேண்-டிய பேச்சுக்களை பேசாமல் இருப்பதால் சிஎம் சார் வாய் திறந்து பேசுங்க என சட்டைக-ளில் ஸ்டிக்கர் ஒட்டிக்-கொண்டு கழக எம்எல்-ஏக்கள் தலைமைச் செயலகம் வந்த போதும் க ண் டு கொ ள் ள ா த முதல்வர் தான் இப்பொ-ழுது உள்ள முதல்வர் ரீல்ஸ் ஆட்சியில்தமிழக வெற்றி கழக தொண்டர்-கள் ஆய்வு என்ற பெய-ரில் அக்கப்போர் செய்-வதை முதல்வர் கண்டிக்கவில்லை அதன் விளைவு தலைமைச் செயலகத்தில் அமைச்-சர் அறையில் இருந்து ரீல்ஸ் எடுத்து விடுவது மாவட்ட ஆட்சித் தலை-வர் இருக்கையில் அமர்ந்து ரீல்ஸ் போடு-வது என நாடு முழுவதும் ரீல்ஸ் ஆட்சி தான் நடை-பெற்றுக் கொண்டிருக்கி-றதுமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக்கட்டிலில் அமர-வைக்காது போனாலும் மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே இயக்-கம் திமுக என்பதை பெருமையோடு செல்வ-தோடு கழகம் மீண்டும் வெல்லும் தளபதி ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார் என உறுதிப்பட கூறினார்

### ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# போதைப்பொருள் தடுப்பு மற்றும் போதைப் பொருட்களை உபயோகிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்டம், அரசு தலைமை மருத்து-வமனை ரவுண்டானா அருகில், மாவட்ட ஆட்-சித்தலைவர் ச.கந்தசாமி போதைப்பொருள் தடுப்பு வாரத்தினை முன்னிட்டு, போதைப்பொருள் தடுப்பு மற்றும் போதைப் பொருட்களை உபயோ-கிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தீமைகள் குறித்த விழிப்-புணர்வு பேரணியினை நேற்று (24.06.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

போதைப்பொருட்க-ளின் தீமைகள் குறித்தும், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போதைப்பொருள் பழக்-கத்திலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்-தினார்கள். போதைப்-பொருள் இல்லாத சமூ-கத்தை உருவாக்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்-கைகளின் ஒரு பகுதியாக இப்பேரணி நடைபெற்-றது. இப்பேரணியில் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலி-யர்கள், தன்னார்வலர்-கள் மற்றும் இளம்செஞ்-சிலுவைச் சங்கம், சாரண-சாரணியர், நாட்டு நலப்பணித் திட்-டம், போதைப் பொருள் ஒழிப்பு ஒருங்கிணைப்புக் குழுவினர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 150-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பதாகை-கள் கையில் ஏந்திச் சென்று வழியெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

இப்பேரணியின் போது, மாவட்ட காவல் கண்கா-ணிப்பாளர் கிரண் ஸ்ருதி ,முதன்மைக்கல்வி அலு-வலர் முனைவர் இ. மான்விழி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில்முன்னாள்படைவீரர்அவர்தம்வாரிசுதாரர்களுக்குகல்விஉதவித்தொகையினைமாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (24.06.2026) வழங்கினார்.

### ஈரோடு மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்

# ஈரோடு மாவட்ட முன்னாள் படைவீரர்கள், அவர்தம் சார்ந்தோர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்-சியர் அலுவலக கூட்ட-ரங்கில், மாவட்ட முன்-னாள் படைவீரர்கள், அவர்தம் சார்ந்தோர்கள் மற்றும் வாரிசுதாரர்க-ளுக்கான சிறப்பு குறை-தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலை-வர் ச.கந்தசாமி, தலை-மையில் நேற்று (24.06.2026) நடைபெற்-றது. முன்னாள் படைவீ-ரர் நல அலுவலகம் மூலம் முன்னாள் படை-வீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களின் குழந்-தைகளுக்கு கல்வி நிதி-யுதவி, ஈமச்சடங்கு நிதி-யுதவி, முன்னாள் படைவீரர்களின் வித-வையர்களுக்கு வீட்டு வரிச்சலுகை, இரண்-டாம் உலகப்போர் நிதியு-தவி, மாதந்திர நிதியுதவி, மனவளர்ச்சி குன்றி-யோர் நிதியுதவி (முன்-னாள் படைவீரர்களின் சிறார்கள்), புற்றுநோய் நிவாரண நிதியுதவி (விதவை), பக்கவாத நோய் நிவாரண நிதியுதவி (முன்னாள் படை ழ்வீரர்கள்), கண்-பார்வையற்றோர் நிதியுதவி, உடல் ஊன-முற்றோர் நிதியுதவி,கண் கண்ணாடி நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்-பட்டு வருகிறது. நேற்-றைய தினம் நடைபெற்ற இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்-கள், ஈரோடு மாவட்ட முன்னாள் படைவீரர்-கள், அவர்தம் சார்ந்-தோர்கள் மற்றும் வாரி-சுதாரர்களிடமிருந்து வீட்டு மனைப்பட்டா,வீடு, குடிநீர் வசதி, அடிப்படை வசதி உள்ளிட்ட 12 கோரிக்கை மனுக்களை பெற்று, சம்பந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி, உரிய நடவ-டிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், நிலுவையி லுள்ள மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு-மென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் 2 முன்-னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக தலா ரூ.25,000/-வீதம் ரூ.50,000/- க்கான காசோலையினைவழங்-கினார்.

இக்கூட்டத்தின் போது, உதவி இயக்குநர், (முன்-னாள் படை வீரர் நலன்) சங்கீதா, மாவட்ட ஆட்சி-யரின் நேர்முக உதவி-யாளர் (நிலம்) முரளி, மாவட்ட முன்னோடி வங்கி முதன்மை மேலா-ளர் (கனரா வங்கி) சாய் கண்ணன், முன்னாள் படை வீரர் நலன் கண்கா-ணிப்பாளர் ஷெரிப், லெப் கர்னல். நாகராஜன் (ஓய்வு) (மாவட்ட முப்-படை வீரர் வாரிய உபத-லைவர்), நல அமைப்பா-ளர் சீ.சாமுவேல் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியில் தேசிய திறனாய்வுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி தலைமை தாங்கினார். தேசியதிறனாய்வுதேர்வில்வெற்றிபெற்றமாணவிகளுக்குச்சான்றிதழ்வழங்கிச்சிறப்பித்தார். இந்தநிகழ்வில் மாணவமாணவிகளுடன் பெற்றோரும் கலந்துகொண்டனர்.

# If not a passport, then what? MEA statement reignites citizenship debate

*A passport can get an Indian across international borders, secure consular protection in a foreign country and establish nationality before immigration authorities worldwide. Yet, according to officials of the external affairs ministry, it is not proof of citizenship.*

*The seemingly technical clarification, made on Passport Seva Divas on Wednesday while unveiling the benefits of chip-enabled e-passports, has revived a long-standing legal question that has acquired renewed significance amid recent controversies over electoral roll revisions and citizenship verification exercises: if even a passport does not conclusively prove citizenship, what document does?*

*counter-intuitive because the very law governing passports proceeds on the premise that the holder is an Indian citizen. Under Section 5 of the Passports Act, 1967, a passport authority may issue a passport only after considering the application and making such inquiry as it deems necessary, while Section 6(2)(a) expressly requires the authority to refuse a passport if the applicant is not a citizen of India. In other words, the law contemplates that a passport is issued only after the state has satisfied itself about the applicant's citizenship. That is what makes the ministry's clarification intriguing: if a document that cannot legally be issued to a non-citizen is still not proof of citizenship, citizens may legitimately wonder what document is. Under the Passports Act, passports are issued to Indian citizens for international travel. Applicants undergo police verification and scrutiny of multiple government records before the document is granted. The ministry's position appears to draw a distinction between a passport being evidence of citizenship and being conclusive proof of citizenship. Legally, the government retains the power to impound or revoke a passport if it discovers that citizenship was wrongly claimed or obtained through misrepresentation.*




Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.